21st October 1971]

Untouchability

* 9. *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state :

(*a*) whether the District Welfare Officer, Madras has conducted any enquiry about the practice of untouchability by the Brahmana Vaideekha Sabha i n Chitrakulam North Street, Mylapore, Madras during 1970;

(*b*) if so, the details thereof; and

(*c*) the action taken against the Sabha?

தீண்டாமை

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு அரிசன நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1970-ஆம் ஆண்டில், சென்னை, மயிலாப்பூரைச் சேர்ந்த, சித்திரக் குளம் வடக்கு வீதியில் உள்ள பிராமண வைதீக சபையினரால் தீண்டாமை கடைப் பிடிக்கப்பட்டது குறித்து, சென்னை மாவட்ட நல அதிகாரி விசாரணை ஏதும் நடத்தியுள்ளாரா?

(இ) ஆம் எனில் விவரமென்ன?

(உ) அச்சபைக்கெதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) மயிலை சித்திரக்குளம் தெருவில், கதவு எண். 4-ல் மயிலை வைதீக மகாசனசபை அமைந்திருக்கிறது. வள்ளண்மைப் பண்புடைய நல்லார் ஒருவரால் நன்கொடையாக அளிக்கப்பட்ட நிலத்தில் இச்சபை அமைந்திருக் கிறது. கட்டிடங்களும் கொடைப் பண்புடையோர் சிலரால் கொடையாக அளிக்கப் பட்டனவாகும். நாள்தோறும், காலை, மாலை இரு வேளைகளிலும் இக்கட்டிடத்திலுள்ள வழிப்பாட்டுக் கூடத்தில் பிராமணப் புரோகிதர்கள் வேத பாராயணம் செய்வது வழக்கம். இச்சபையில் இசை வழிபாடு (பஜனை) களும், சமயச் சொற்பொழிவுகளும் கூட, முறையாக நடைபெற்று வருகின்றன. இச்சபையால் நாள்தோறும் ஏழைகட்கு உணவு அளிக்கப்படுகிறது. ஏழை கட்கு உணவளிப்பதில் சாதி, இனப்பாகுபாடு எதுவும் பாராட்டப்படுவது கிடையாது. இச்சபை எந்த அரிசன வகுப்பைச் சார்ந்த நபர் மீதும், எந்த வடிவிலும் தீண்டாமையைக் கடைப்பிடிக்கவில்லை யாதலால் 1955-ம் ஆண்டு தீண்டாமை (குற்றங்கள்) சட்டத்தின் கீழ் இச்சபை மீது நடவடிக்கை ஏதும் எடுப்பதற்கில்லை.

(உ) இவ்வினா எழவில்லை.

திரு. சி. வி. ராஜகோபால் : தலைவர் அவர்களே, இப்போது தீண்டாமை ஒழிப்பு வாரியம் அமைக்கப்படுவதைப் போல, நாட்டிலே அதிகமாகப் பரவி யிருக்கிற ஜாதி வெறியை ஒழிப்பதற்கு ஒரு ஜாதி வெறி ஒழிப்பு வாரியம் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : வாரியத்திற்கு வெறியிருக்க வில்லை.